DEPOSITION OF WITNESS
In the Court of District Munsif Cum Judicial Magistrate Court,Uthukottai.
O.S. No. 77 of 2012
Plaintiff Witness : PW - 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திருமதி. தீபா | Caste | : | |
| Husnand Name | : | திரு. ரஞ்சித்குமார் | Calling | : | |
| Village | : | செம்புலிவரம் | Religion | : | |
| Taluk | : | | Age | : | 43 |

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.02.2025

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு. விஸ்வநாதன் என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2025ம் ஆண்டு பிப்ரவரி மாதம் புதன்கிழமை 12ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

முதல் விசாரணை நேரம் 11.40

1. நான் ஏற்கனவே இவ்வழக்கில் நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்தேன். பிரதிவாதிகள் தரப்பில் பதில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் இந்நீதிமன்றம் தாமாக பிரதிவாதிகளுக்கு வாய்ப்பு அளிக்கவேண்டும் என்று உத்தரவு செய்யப்பட்டதால் கூடுதல் நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். இதில் உள்ள சங்கதிகள் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையின் அடிப்படையில் கூடுதலாக சாட்சியம் அளிக்கின்றேன்.

இரண்டாம் பிரதிவாதி தரப்பில் மட்டும் குறுக்கு விசாரணை:

2. நான் நிரூபணவாக்குமூலத்தில் பொய்யான சங்கதிகள் கொண்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

3. பிரதிவாதிகள் தான் வழக்கு சொத்தினை வாய்மொழியாக கிரையம் பெற்று அவரது அனுபவத்தில் தான் இருந்து வருகின்றது என்றாலும், நாங்கள் பொய்யான சங்கதிகளை வழக்குரையிலும், நிரூபணவாக்குமூலத்திலும் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

4. பிரதிவாதிகள் பெயரில் வீட்டு வரி இரசீதுகள், குடிநீர் வரி இரசீதுகள் அனைத்தும் பெற்று அவர்களது வழக்கு சொத்தில் இருந்து வருகின்றது என்றால் ஆவணங்கள் எதுவும் முன்னிலை செய்யப்படவில்லை அது குறித்து எனக்கு தெரியாது.

5. நான் இந்நீதிமன்றத்தில் மற்றொரு வழக்கில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால்

மற்றொரு அசல் வழக்கு எண் 55-2012 சாட்சியம் அளித்துள்ளேன் ஏ்ன்றால் சரிதான். அந்த வழக்கில் இவ்வழக்கின் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் உண்மையானவை என்றால் சரியல்ல.

6. நான் இந்த வழக்கிற்கான பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சியம் முடிவுற்ற நேரம் 11.55